பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 04 2024 **SUNDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மக்களவை தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவுக்கு இன்னும் ஐந்து நாட்களே உள்ள நிலையில் 102 தொகுதிகளில் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

2. மத்திய அரசின் கிழக்கு நோக்கிய கொள்கை வடகிழக்கு மாநிலங்களை தெற்காசியா மற்றும் கிழக்காசியாவுக்கான நுழைவு வாயிலாக மாற்றும் என்று பிஜேபி தலைவர் திரு. ஜெபி. நட்டா கூறியுள்ளார்.

3. ஜனநாயகமும் அரசியல் சாசனமும் காப்பாற்றப்பட்டால் தான், மக்கள் தங்கள் சுதந்திரத்தை காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

4. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாளான இன்று, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் 68 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் ராதிகா வெள்ளிப்பதக்கம் வென்றார்..

>>>>><<<<<

மக்களவைக்கு முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 17 மாநிலங்கள் மற்றும் நான்கு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்களும், நட்சத்திர பேச்சாளர்களும் தொகுதிகளில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வேட்பாளர்கள், வாகனங்களில் சென்று வாக்காளர்களை சந்தித்து, ஆதரவு திரட்டி வருகின்றனர்.

மக்களவைத் தேர்தலோடு, சிக்கிமில் 32 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும், அருணாச்சலப்பிரதேசத்தில் 60 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் இம்மாதம் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

அந்த தொகுதிகளிலும் தேர்தல் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

பிஜேபி தலைவர் திரு. ஜெபி. நட்டா நேற்று நாகாலாந்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

கிழக்கு நோக்கிய கொள்கை என்பது வடகிழக்கு மாநிலங்களோடு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது அல்ல என்றும், அது இம்மாநிலங்களை தெற்காசியா மற்றும் கிழக்காசியாவுக்கான நுழைவு வாயிலாக மாற்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயகமும் அரசியல் சாசனமும் காப்பாற்றப்பட்டால் தான், மக்கள் தங்கள் சுதந்திரத்தை காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு துறைகளில் தோல்வியை சந்தித்ததாகவும், அதற்கும் காங்கிரஸ் கட்சியே தான் பிஜேபி குற்றம் சாட்டி வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இன்னும் எத்தனை ஆண்டுகள் தான் காங்கிரஸ் கட்சியை குற்றம் சாட்டுவீர்கள் என்று கேள்வி எழுப்பிய அவர், கடந்த 75 ஆண்டுகளில் ஐஐடி, ஐஐஎம் போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் யாரால் உருவாக்கப்பட்டது என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு முன்முயற்சி எடுக்காமல் இருந்திருந்தால், சந்திரயான் வெற்றி சாத்தியமாகி இருக்குமா என்றும் திரு. மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பினார்.

மத்திய அரசின் நலத்திட்டங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சென்றடைந்துள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், மத்திய நிதியமைச்சருமான திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மகளிர் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

நலத்திட்டங்களுக்கு தேவையான நிதியை மத்திய அரசு ஒதுக்கியதாகவும், இத்திட்டங்கள் பயனாளிகளை சென்றடைவதை அரசு உறுதிப்படுத்தியுள்ளதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பொறுப்பேற்ற போது இந்தியாவின் கடன் 58 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது என்றும், கடந்த பத்தாண்டுகளில் இது 155 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்று திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவினாசியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், பண மதிப்பிழப்பு, சரக்கு மற்றும் சேவை வரி ஆகியவற்றால் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் ஏராளமான சிறு குறு நடுத்தர தொழில்நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

எளிதாக தொழில் தொடங்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் 13வது இடத்திலிருந்து 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் திமுக ஆட்சியில் அரிசி, சமையில் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

பெரம்பலூரில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், மாநிலத்தில் திமுக ஆட்சிக்கு வந்த கடந்த மூன்றாண்டுகளில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு எந்த திட்டத்தையும் நிறைவேற்றவில்லை என்று கூறினார்.

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் மகளிருக்கு வழங்கப்பட்ட விலையில்லா ஸ்கூட்டர் உள்ளிட்ட திட்டங்களை திமுக அரசு நிறுத்திவிட்டதாகவும், அம்மா மினி கிளினிக் மூடப்பட்டு விட்டதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆந்திர முதலமைச்சர் திரு. ஜெகன்மோகன் ரெட்டி, நேற்று விஜயவாடாவில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த போது கல் வீசி தாக்கப்பட்டார்.

திறந்த வாகனத்தில் அவர் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போது, இந்த சம்பவம் நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

கல் வீசப்பட்டதில் அவருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர் மீதான தாக்குதலுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது சமூகவலைதளப் பதிவில், திரு. ஜெகன்மோகன் ரெட்டி விரைந்து குணமடைய பிரார்த்திப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்மாநில முன்னாள் முதலமைச்சரும், தெலுகு தேசம் கட்சித் தலைவருமான திரு. சந்திரபாபு நாயுடு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளதோடு,

இதுகுறித்து தேர்தல் ஆணையம் பாரபட்சமின்றி விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் கண்டனம் விடுத்துள்ள அறிக்கையில், அரசியல் வேறுபாடுகள் வன்முறையாக மாறக்கூடாது என்றும், ஜனநாயக செயல்பாட்டில் ஈடுபடும்போது, நாகரிகத்தையும், பரஸ்பர மரியாதையையும் நிலைநாட்ட வேண்டும் என்று கூறியுள்ளார்.

>>>>><<<<<

அரசியல் சாசன சிற்பி டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இதை முன்னிட்டு நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தவுள்ளனர்.

அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, வாழ்த்து தெரிவித்துள்ளார்.

டாக்டர் அம்பேத்கரின் லட்சியங்களை ஏற்றுக் கொண்டு, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட இந்நாளில் உறுதியேற்போம் என்று அவர் கூறியுள்ளார்.

சட்ட வல்லுநர், கல்வியாளர், பொருளாதார நிபுணர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் அரசியல் தலைவர் என நாட்டிற்கும், சமூகத்திற்கும் சிறப்பான பங்களிப்பை பாபாசாகேப் அம்பேத்கர் செய்துள்ளதாகவும் குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழ் புத்தாண்டு இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இதனை ஒட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், புத்தாண்டு அனைவருக்கும் நல்ஆரோக்கியம், மகிழ்ச்சி, வெற்றி மற்றும் மனநிறைவை அளிக்கட்டும் என்று கூறியுள்ளார்.

புதிய உத்வேகம் ஆற்றல் மற்றும் உற்சாகத்துடன் தேசத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்காக நம்மை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்வோம் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு கட்சி தலைவர்களும் தமிழக மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு கோவில்களில் இன்று காலை முதல் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் மேலும் 16 பேர் கொண்ட வேட்பாளர்கள் அடங்கிய பட்டியலை காங்கிரஸ்கட்சி வெளியிட்டுள்ளது.

ஒடிசாவில் 9 தொகுதிகளுக்கும், குஜராத்தில் 4 தொகுதிகளுக்கும், ஹிமாச்சலப்பிரதேசத்தில் இரண்டு தொகுதிகளுக்கும், சண்டிகரில் ஒரு தொகுதிக்கும் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. மனீஷ் திவாரி, சண்டிகர் மக்களவைத் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

ஹிமாச்சலப் பிரதேச மாநில அமைச்சர் திரு. விக்ரம் ஆதித்யசிங், மண்டி தொகுதியில், பிஜேபி வேட்பாளர் செல்வி. கங்கனா ரெனாவத்தை எதிர்த்து நிறுத்தப்பட்டுள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ஸ்ரீகாந்த் ஜனா, ஒடிசாவின் பாலசோர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

>>>>><<<<<

சிரியாவில் ஈரான் தூதரக அலுவலகம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதை அடுத்து, அந்நாட்டின் மீது ஈரான் ஏராளமான ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை கொண்டு தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேலில் உள்ள முக்கியமான இலக்குகளை குறி வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்நாட்டின் செய்தி நிறுவனங்களும், ஈரான் புரட்சிகர படையும் தெரிவித்துள்ளது.

ஈரான் தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ள இஸ்ரேல், முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கூறியுள்ளது.

இந்நிலையில் மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை அடுத்து, அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகருடன் கலந்து ஆலோசித்தார்.

இன்று வெள்ளை மாளிகையில் தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெறவுள்ள அந்த குழுவின் செய்தி தொடர்பாளர் திரு. ஆட்ரினா வாட்சன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், மேற்காசிய நிலைமை குறித்து, பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் திரு. டேவின் கேமரூனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

**>>>>><<<<<**

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளின் மறைவிடத்தை கண்டுபிடித்து அழித்துள்ளனர்.

அங்கிருந்து ஏராளமான ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் கைப்பற்றினர்.

சக்திவாய்ந்த வெடிமருந்துகள் டிபன் பாக்ஸில் பொருத்தப்பட்டிருந்ததையும், அவை எலெக்ட்ரிக் டெட்டனேட்டருடன் இணைக்கப்பட்டிருந்ததையும் பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்தனர்.

இரண்டு கை துப்பாக்கிகளும், தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

**>>>>><<<<<**

கிர்கிஸ்தானில் நடைபெறும் ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் 68 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் ராதிகா வெள்ளிப்பதக்கம் வென்றார். 50 கிலோ எடைப்பிரிவில் **Shivani Pawar** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**>>>>>END<<<<<**